<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 500/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | ரமேஷ் |
| **Father Name** | ~ | மணி ஐயர் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.**</u>

<u>**04.02.2026.**</u>

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எதிரியை எவ்வளவு காலமாக தெரியும் என்றால் 2015 ஆம் ஆண்டு முதல் தெரியும். எந்த வகையில் எதிரியை தெரியும் என்றால் நாங்கள் அபிலாஷ் கெமிக்கல்ஸ் என்ற பெயரில் கெமிக்கல் உற்பத்தி செய்து வருகிறோம். எதிரிக்கு எங்களது நிறுவனத்தின் கெமிக்கல்களை விற்பனை செய்யும் டீலராக இருந்து வந்தார். எனக்கும் எதிரிக்கும் எவ்வளவு நாட்கள் வியாபார பரிவர்த்தனை இருந்தது என்றால் 2015 ஆம் ஆண்டு முதல் ஒன்றரை ஆண்டுகள் இருந்தது.அதன் பின்னிட்டு வியாபாரம் சம்பந்தமாக எனது நிறுவனத்திற்கும் எதிரிக்கும் இடையே எவ்வித பரிவர்த்தனையும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.மேற்படி ஒன்றரை வருட கால இடைவெளியில் தான் வியாபாரம் சம்பந்தமான எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது புகார் மனுவில் எதிரி எனது நிறுவனத்திற்கு எவ்வளவு தொகை நிலுவை வைத்துள்ளார் என

குறிப்பிட்டுள்ளேன் என்றால் ரூபாய் 8,11,771/- நிலுவை இருந்தது. மேற்படி நிலுவை தொகை உள்ளது தொடர்பாக எவ்வித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. எதிரி அளித்த காசோலையானது மேற்படி வியாபாரம் நடைபெற்ற ஒன்றரை ஆண்டு கால இடைவெளியில் வழங்கப்பட்டது என்றால் இல்லை. 2016 ஆம் ஆண்டு இறுதியில் மேற்படி வியாபார பரிவர்த்தனைக்காக நான்கு காசோலைகள் வழங்கினார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த காசோலைகள் எவ்வளவு தொகைக்கு வழங்கப்பட்டது என்றால் 3 லட்சம், 2 1/4 லட்சம், 2 1/2 லட்சம் என மொத்தம் 7,75,000/-த்திற்கு காசோலை கொடுத்தார். எதிரி மேற்படி காசோலை தொகை முழுவதையும் எனது நிறுவனத்திற்கு திருப்பி செலுத்தி விட்டார் என்றாலும் எனது நிறுவனம் தான் அந்த காசோலைகளை எதிரிக்கு திருப்பி தரவில்லை என்றால் தவறு. எதிரி எனக்கு வழங்கிய காசோலைகள் என்ன காரணத்திற்காக மதிப்பு மறுக்கப்பட்டது என்றால் வங்கி கணக்கு மூடப்பட்டு விட்டதாக காசோலை திருப்பப்பட்டது. நான் எதிரியிடம் பெற்ற காசோலை தொலைந்து விட்டதாக சொன்னதின் பேரில் எதிரி அந்த வங்கி கணக்கு மூடிவிட்டார் என்றாலும் அந்த காசோலைகளை மதிப்பு செய்யக்கூடாது என வங்கிக்கு கடிதம் அனுப்பி உள்ளார் என்றால் சரியல்ல. காசோலைக்கு உண்டான தொகையை எதிரியிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்பு எதிரியிடமிருந்து தொகை பெறுவதற்காக தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d C.P. Mullai Vanan**
District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.